# சங்கர விஜயம் - 2012

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யாள்

**ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்**

பெரியகுளம் விஜயம்



ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரம்

ஞாயிறு, 3 ஆம் தேதி - திங்கள், 4 ஆம் தேதி, ஜூன் 2012

## நிகழ்ச்சி நிரல்

**வெள்ளி - ஜூன் 1 ஆம் தேதி,**
**சனி - ஜூன் 2 ஆம் தேதி**

மாலை 6.30 மணி : **பிரம்மஸ்ரீ தாமோதர தீக்ஷிதர்** அவர்களின் சொற்பொழிவு
தலைப்பு **" சிவ லீலா "**

**ஞாயிறு - ஜூன் 3 ஆம் தேதி**

மாலை 4.00 மணி : பஜன் மற்றும் நாமஸங்கீர்த்தனம்
**உடையாளூர் திரு K. கல்யாணராம பாகவதர் மற்றும் குழுவினர்**

மாலை 6.00 மணி : பெரியகுளம் எல்லையில் **ஜகத்குருவிற்கு வரவேற்பு**

மாலை 6. 10 மணி : **'குரு வந்தனம்'** - சிறப்பு நிகழ்ச்சி

- தூளி பாத பூஜை
- வேதகோம்
- இறை வணக்கம்
- ஸமஸ்க்ருத வரவேற்புரை - **திரு K. சிவமூர்த்தி**
- தமிழில் வரவேற்புரை - **புலவர் திரு S. ஸ்ரீனிவாஸன்**
- பெரியகுளம் பக்தர்கள் சார்பாக ஸமர்ப்பணம் -
  நகர்மன்ற தலைவர் **திரு O. ராஜா**
- வேதபண்டிதர்களை கௌரவித்தல் -
  **பிரம்மஸ்ரீ V. தியாகராஜ தீக்ஷிதர்**
  **பிரம்மஸ்ரீ Dr.P.K. இராஜகோபால பட்டாச்சாரியார்**
- உதவித்தொகை பெறுவோர் -
  **S.P.R. பாண்டியன் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி,** பெரியகுளம்.
  **மனிதநேய ஆதரவற்றோர் காப்பகம்**, தேனி.
- துவக்கவுரை -
  சிருங்கேரி மடத்தின் தலைமை நிர்வாக அதிகாரி
  **பத்மஸ்ரீ Dr. V.R. கௌரிசங்கர்**
- சிறப்புரை -
  மாண்புமிகு தமிழ்நாடு நிதித்துறை அமைச்சர்
  **திரு O. பன்னீர்செல்வம்**

  மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்
  **திரு V. இராமசுப்ரமண்யம்**

மாலை 7.30 மணி : **ஜகத்குருவின் அருளுரை**

மாலை 8.30 மணி : **ஜகத்குரு நிகழ்த்தும் ஸ்ரீ சாரதா சந்திரமௌலீஸ்வர பூஜை**

**திங்கள் - ஜூன் 4 ஆம் தேதி**

காலை 8.00 மணி : ஸ்ரீ சாரதா சந்திரமௌலீஸ்வர பூஜை

காலை 9.30 மணி : பொதுமக்களுக்கு ஜகத்குரு தரிசனம்
பக்தர்கள் பங்குகொள்ளும் பாத பூஜை மற்றும் பிக்ஷா வந்தனம்

மதியம் 1.00 மணி : பிரஸாதம் வழங்குதல்

# சங்கர விஜயம் - 2012

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யாள்

## ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

பெரியகுளம் விஜயம்

இடம் : ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரம்

118/1, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம், தேனி மாவட்டம் - 625 601.

நாட்கள் : ஞாயிறு மாலை முதல் திங்கள் மாலை வரை

தேதி : ஜுன் 3 - 4 தேதிகள்

ஞாயிறு, ஜுன் 3, மாலை 6.00 மணியளவில்

நடைபெறும் **குருவந்தனம்** நிகழ்ச்சியில்

## ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

அருளுரை வழங்க உள்ளார்கள்

மாலை 8.30 மணியளவில்

**ஜகத்குரு சங்கராச்சார்யாள்**

ஸ்ரீ சாரதா சந்திரமௌலீஸ்வர பூஜை நிகழ்த்த உள்ளார்கள்.

அனைவரும் வருக! அருள் பெருக!!

# ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகள்

ஆதிசங்கர பகவத்பாதாள் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் பாரதத்தின் நான்கு திசைகளில் நான்கு மடங்களை நிறுவினார்கள். அதில் தென் திசையில் அவர் நிறுவிய மடம் தான் ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம். இங்குதான் ஸ்ரீ சாரதா பீடத்தை ஏற்படுத்தினார்கள். இந்த பீடம் கர்நாடகா மாநிலத்தில், சிக்மகளூர் ஜில்லாவில், சிருங்கேரியில் உள்ளது. இந்த பீடத்தை பல மஹான்கள், ஞானிகள், யோகிகள் அலங்கரித்து வந்துள்ளனர்.

1954ல் இருந்து 1989ஆம் ஆண்டு வரை இப்பீடத்தை அலங்கரித்தவர் தலைச்சிறந்த ஜீவன்முக்தராக திகழ்ந்த **ஜகத்குரு ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்** ஆவார்கள். இவர்கள் பெரியகுளத்திற்கு பலமுறை விஜயம் செய்திருக்கிறார்கள். இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது 23 வயதிலேயே 1974 ஆம் ஆண்டு துறவறம் மேற்கொண்டவர் **ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்.** இவர் 1989 ஆம் ஆண்டு முதல் பீடத்தை அலங்கரித்து அருளாசி புரிந்து வருகிறார்கள். இவர் வேதம் மற்றும் சாஸ்திரங்களில் ஒப்பற்ற பண்டிதர். துறவிகளில் உன்னதமானவர், மஹா ஞானி, மிகுந்த கருணை உள்ளம் கொண்டவர், தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு எந்த பாகுபாடும் பாராது அருள் புரிபவர். ஆன்மீக கருத்துக்களை எளிமையாக எடுத்துரைப்பவர். மனித வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவர். இப்படிப்பட்ட சத்குருவின் பாதச் சுவடுகளை பற்றியவர்கள் பலர் தனது வாழ்க்கையில் மேம்பட்டுள்ளார்கள்.

இதற்கு முன்பு 1980, 1981, 1987 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் பெரியகுளத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். 1995 ஆம் ஆண்டு பெரியகுள நகரவாசிகளின் நன்மைக்காக ஒரு பிரவசன மந்திரத்தை ஏற்படுத்தி திறந்து வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஜகத்குரு, ஒவ்வொரு நாளும் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையை, 1200 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்திய மரபு மாறாது நிகழ்த்துகிறார். ஆதிசங்கரரால் அருளப்பட்ட ஸ்படிக லிங்கம் இந்த பூஜையில் ஜகத்குருவின் திருக்கரங்களால் இன்றும் ஆராதிக்கப்படுகின்றது. இந்த பூஜையையும், ஜகத்குருவையும் தரிசிப்பதற்கான மிக அரிய வாய்ப்பு நம் ஒவ்வொருவருக்கும் இப்போது கிடைத்திருக்கின்றது.

எனவே, 17 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்திருக்கும் இந்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாது பக்தர்கள் அனைவரும் வந்திருந்து ஜகத்குருவின் அருளுக்கு பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

---

மிக முக்கிய குறிப்பு : பாத பூஜை, பிக்ஷா வந்தனம் மற்றும் பல ஸேவைகளில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளோர், ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரத்தில் ஜுன் மாதம் 1ஆம் தேதியிலிருந்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு : L. Sasidharan - 94437 04443